# விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
# இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்

# பெறுகை அறிவித்தல்

# 2025ஆம் வருடத்திற்கான பாதுகாப்பு சேவை ஏற்பாட்டிற்கான விலைக்கோரல்கள்

**விலைமனு இல.: NERDC/DPC Minor (S)/01(i)24**

01. NERD நிலையத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு நிறுவனங்களிடமிருந்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (இலங்கை NERD நிலையம்) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் 2025-02-14ஆம் திகதி பி.ப. 2.00 வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அடிப்படை தேவைகள்:**

I. நிறுவனமானது 2025ஆம் வருடத்தில் பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்பு பிரிவில் பதிவு செய்திருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களுடன் சேர்த்து பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெறப்பட்ட செல்லுபடியான உரிமத்தின் பிரதி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

II. பாரிய அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிர்வாகங்கள் அல்லது தனியார் அமைப்புகளுக்காக வெற்றிகரமாக பாதுகாப்பு சேவையை வழங்கியதில் (2022, 2023 மற்றும் 2024 உட்பட) குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் மாத்திரமே விலைமனுவுக்கு தகுதி பெறுவர்.

III. சம்பளச் சபை கட்டளைச் சட்டம், ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. இன் கீழ் தமது ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்கும் தேவைகளை விலைமனுதாரர்கள் உறுதி செய்ய வேண்டும் என்பதோடு, அதற்காக விலைமனுவுடன் கடந்த 02 ஆண்டுகள் ஆவண அத்தாட்சியை சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மீளளிக்கப்படாத கட்டணமாக 2,300.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் 2025-01-24ஆம் திகதி முதல் 2025-02-13ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் வழங்கல் அலுவலகத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனு திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படுவர். விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் NERD நிலையம், நிதி – பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

04. விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை NERD நிலையம், 2P/17B, IDB, கைத்தொழில் பேட்டை, ஏக்கல, ஜாஎல என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது NERD நிலையம், நிதி – பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''விலைக்கோரல் இல.: NERDC/DPC Minor (S)/01(i)/24 – பாதுகாப்பு சேவை ஏற்பாடு மற்றும் 2025-02-14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் திறக்க வேண்டாம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. தமது தகைமையை நிரூபிக்கும் அத்தாட்சி ஆவணம் மற்றும் வர்த்தகக் கடிதத் தலைப்புத் தாள் ஒன்றில் ஆவணங்களுக்கான கோரிக்கை கடிதத்தை சமர்ப்பித்தால் மாத்திரமே விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

06. விரும்பினால் விலைமனு ஆவணங்களை பெறுவதற்கு முன்னர் அவைகளை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை NERD நிலையம்**
**2P/17B, IDB, கைத்தொழில் பேட்டை,**
**ஏக்கல, ஜாஎல.**
**தொலைபேசி : 011-3500017, 011-2236284, 011-2236307**
**தொலைநகல் : 011-2233153,**
**மின்னஞ்சல்: supplies@nerdc.lk**